யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | இலங்கை வரலாறு | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

❖ 01 - 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் இடுக.

01) (1) கதம்பநதி (2) வனநதி (3) மகாநதி
(4) கரிந்திநதி (5) குடிகந்த நதி (.......)

02) (1) சூரநிமல (2) தேரபுத்தஅபய (3) திக்சந்த
(4) வேலுசுமண (5) புஸ்ஸதேவ (.......)

03) (1) மஹேலேன (2) சிட்டுனா (3) பண்டஹரிக
(4) துலாதார (5) மஹேல (.......)

04) (1) உத்தரதேசம் (2) பச்சிமதேசம் (3) தக்கிணதேசம்
(4) பாச்சினதேசம் (5) மத்தியதேசம் (.......)

05) (1) கொன்ஸ்தான்ஸ்டீ பிரகன்சா
(2) பிலிப்டி ஒலிவேரா
(3) பெரேரா போபஸ்டிசூஸா
(4) ஜோரிஸ்வான் ஸ்பில் பேஜன்
(5) அல்போன்ஸோ லதர்சா (.......)

❖ 06 - 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

06) (1) மல்வத்துஓயா - அநுராதகம
(2) கலாஓயா - உருவெலகம
(3) கம்பீரநதி - உபதிஸ்ஸகம
(4) கல்லோயா - தீகவாவி
(5) வனநதி - மகாகம (.......)

07) (1) தாதுசேனன் - தக்கிண விகாரை
(2) மகாசேனன் - ஜேத்தவன விகாரை
(3) தேவநம்பியதீஸன் - தூபராம விகாரை
(4) வட்டகாமினி - அபயகிரி விகாரை
(5) வசபன் - அளுவிகாரை (.......)

08) (1) நகர நிர்வாகம் - நகரகுத்திக
(2) கொடிபதாகை - பருமக
(3) களஞ்சியம் - பண்டகாரிக
(4) ஆவணம் - மஹலே
(5) வாள்படை - அசிக்காக (.......)

09) (1) 2ம் பராக்கிரமபாகு - தம்பதேனியா
(2) 4ம் பராக்கிரமபாகு - குருநாகல்
(3) 5ம் பராக்கிரமபாகு - கோட்டை
(4) 4ம் விஜயபாகு - யாப்பகூவ
(5) 4ம் புவனேகபாகு - கம்பளை ( .......)

10) (1) மது ஒழிப்பு இயக்கம் - $F.R.$ சேனநாயக்க
(2) பௌத்த இளைஞர் சங்கம் - $D,W.$ ஜயதிலக
(3) சிங்கள மகா சபை - $S.W.R.D$ பண்டாரநாயக்க
(4) இலங்கை தேசிய சங்கம் - சேர். பொன். இராமநாதன்
(5) மகாபோதி சங்கம் - அநாகரிக தர்மபால ( .......)

❖ **11 - 15 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுக்கள் திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் $X,Y$ என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. $Y$ நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுக்கள் திகதிகள் $X$ நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை $Y$ நிரலில் உள்ளவற்றை $X$ நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும் போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11)

| X | Y |
|---|---|
| (1) மகாதீத்த | A - களுத்துறை |
| (2) சூகரதீத்த | B - பெந்தோட்டை |
| (3) நில்வளதீத்த | C - மாதோட்டம் |
| (4) பீமதீத்த | D - ஊர்காவற்றுறை |
| (5) காலதீத்த | E - மாத்தளை |

(1) CABDE (2) CDEBA (3) CEABD (4) CDABE (5) CEDBA ( .......)

12)

| X | Y |
|---|---|
| (1) கல்விகாரை | A - 3ம் விஜயபாகு |
| (2) வெல்கம் விகாரை | B - கொடாபயன் |
| (3) சத்மஹால் பிரசாதய | C - 1ம் பராக்கிரமபாகு |
| (4) அத்தனேகல விகாரை | D - 1ம் விஜயபாகு |
| (5) வட்டலகம விகாரை | E - நிசங்கமல்ல மன்னன் |

(1) CADEB (2) CEADB (3) CDEBA (4) CBADE (5) CEABD ( .......)

13)

| X | Y |
|---|---|
| (1) கருங்கற் சிற்பம் | A - திம்புலாகலை |
| (2) மரச்செதுக்கல் | B - சிகிரியா |
| (3) குகைச் சித்திரம் | C - இசுறுமுனியா |
| (4) பாறைச் செதுக்கல் | D - கண்டக சைத்தியம் |
| (5) குன்று ஓவியம் | E - எம்பக்கே தேவாலயம் |

(1) CEADB (2) CAEBD (3) CDAEB (4) CEABD (5) CDBAE ( .......)

14)

| X | Y |
|---|---|
| (1) சூரதீசன் | A - கரிகாலசோழன் |
| (2) வங்கநாசிக தீசன் | B - முதலாம் ராஜராஜன் |
| (3) முதலாம் சேனன் | C - சேனகுத்திக |
| (4) நான்காம் உதயன் | D - ஸ்ரீமாற ஸ்ரீவல்லவன் |
| (5) ஐந்தாம் மகிந்தன் | E - முதலாம் பராந்தகன் |

(1) CDABE (2) CADEB (3) CEBAD (4) CBADE (5) CADBE ( .......)

15) X Y

| X | Y |
|---|---|
| (1) கோல்புறூக் சீர்திருத்தம் | A - கல்விகற்ற இலங்கையர் தெரிவு |
| (2) குறூமக்கலம் அரசியலமைப்பு | B - ஈரவை பாராளுமன்றம் |
| (3) மனிங் அரசியலமைப்பு | C - சட்டசபையின் தோற்றம் |
| (4) டொனமூர் அரசியலமைப்பு | D - மாகாண ரீதியான பிரதிநிதிகள் தெரிவு |
| (5) சோல்பரி அரசியலமைப்பு | E - சர்வசன வாக்குரிமை |

(1) CAEDB (2) CBADE (3) CADEB (4) CEBAD (5) CBEDA (.......)

❖ **16 - 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவினதும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16) மேல்வருவனவற்றுள் எந்தத் தொகுதியில் அநுராதபுரத்து குளங்கள் சரியான காலக்கிரம வரிசையில் உள்ளன?
(1) அபயவாவி, மகாவிலச்சிய, கலாவாவி, திஸ்ஸவாவி, குருளுவாவி
(2) அபயவாவி, மகாவிலச்சிய, கலாவாவி, குருளுவாவி, திஸ்ஸவாவி
(3) அபயவாவி, திஸ்ஸவாவி, மகாவிலச்சிய குருளுவாவி, கலாவாவி,
(4) அபயவாவி, திஸ்ஸவாவி, கலாவாவி, குருளுவாவி, மகாவிலச்சிய
(5) அபயவாவி, மகாவிலச்சிய, குருளுவாவி, கலாவாவி, திஸ்ஸவாவி (.......)

17) பின்வருவனவற்றில் தென்மேற்கே தோன்றிய இராசதானிகளில் எழுந்த இலக்கியங்களை கால ஒழுங்கில் காட்டும் தொகுதி
(1) சத்தர்மரத்னாவலிய, தலதாசிரித, பரவி சந்தேசய, பரகும்பாசிரித, மயூர சந்தேசய
(2) சத்தர்மரத்னாவலிய, மயூர சந்தேசய, பரவி சந்தேசய, தலதாசிரித, பரகும்பாசிரித,
(3) சத்தர்மரத்னாவலிய, தலதாசிரித, மயூர சந்தேசய, பரவி சந்தேசய, பரகும்பாசிரித
(4) சத்தர்மரத்னாவலிய, மயூர சந்தேசய, தலதாசிரித, பரகும்பாசிரித, பரவி சந்தேசய
(5) சத்தர்மரத்னாவலிய, பரவி சந்தேசய, மயூர சந்தேசய, தலதாசிரித, பரகும்பாசிரித (.......)

18) மேல்வரும் பட்டியல்களுள் எது உருகுணை ராச்சியத்தை ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்களைச் சரியான காலக்கிரம வரிசையிற் கொண்டுள்ளது?
(1) மகாநாக, யட்டாலதிஸ்ஸ, காவந்தீசன், கோத்தபாய, துட்டகாமினி
(2) மகாநாக, கோத்தபாய, யட்டாலதிஸ்ஸ, காவந்தீசன், துட்டகாமினி
(3) மகாநாக, யட்டாலதிஸ்ஸ, துட்டகாமினி, கோத்தபாய, காவந்தீசன்
(4) மகாநாக, யட்டாலதிஸ்ஸ, கோத்தபாய, காவந்தீசன், துட்டகாமினி
(5) மகாநாக, கோத்தபாய, யட்டாலதிஸ்ஸ, துட்டகாமினி, காவந்தீசன் (.......)

19) மேல்வருவனவற்றுள் கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னர்களை கால வரிசைப்படி ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான தொகுதி
(1) சேனாசம்மத விக்கிரமபாகு, 1ம் விமலதர்ம சூரியன், செனரத், 2ம் இராஜசிங்கன், ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன்
(2) சேனாசம்மத விக்கிரமபாகு, செனரத், 1ம் விமலதர்ம சூரியன், 2ம் இராஜசிங்கன், ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன்
(3) சேனாசம்மத விக்கிரமபாகு, 2ம் இராஜசிங்கன், செனரத், 1ம் விமலதர்ம சூரியன், ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன்
(4) சேனாசம்மத விக்கிரமபாகு, செனரத், ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன், 1ம் விமலதர்ம சூரியன், 2ம் இராஜசிங்கன்
(5) சேனாசம்மத விக்கிரமபாகு, ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன், 2ம் இராஜசிங்கன், செனரத், 1ம் விமலதர்ம சூரியன் (.......)

20) மேல்வருவனவற்றுள் இலங்கைக்கு வருகை தந்த ஆணைக்குழுக்களை கால ஒழுங்கில் வரிசைப்படுத்தினால் ஒழுங்காக வரும் தொகுதி

(1) மியூறன் குழு, மக்கலம் குழு, டொனமூர்க் குழு, கோல்புறூக் குழு, சோல்பரிக்குழு

(2) மியூறன் குழு, கோல்புறூக் குழு, மக்கலம் குழு, டொனமூர்க் குழு, சோல்பரிக்குழு

(3) மியூறன் குழு, கோல்புறூக் குழு, டொனமூர்க் குழு, மக்கலம் குழு, சோல்பரிக்குழு

(4) மியூறன் குழு, டொனமூர்க் குழு, கோல்புறூக் குழு, மக்கலம் குழு, சோல்பரிக்குழு

(5) மியூறன் குழு, சோல்பரிக்குழு, டொனமூர்க் குழு, கோல்புறூக் குழு, மக்கலம் குழு (.......)

❖ **21 - 25 வரையுள்ள வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அப் பொருந்தாததைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

(1) பலவீனமான மன்னர்களின் ஆட்சி

(2) மோரிய லம்பகர்ண வம்சங்களுக்கிடையே போட்டி

(3) வேளைக்காரர்களின் கலகம்

(4) நீர்ப்பாசனத் துறை கவனிக்கப்படாமை

(5) சோழர்களின் படையெடுப்பு (.......)

22) நிசங்கமல்லன் எதிர்நோக்கிய சவால்கள்

(1) பௌத்த சங்கத்தாரின் தலையீடு

(2) பலம் பொருந்திய தளபதிகள்

(3) கொவி குலத்தவரின் அச்சுறுத்தல்

(4) பராக்கிரமபாகுவின் புகழ்

(5) தூலபாரக் கொடை அறிமுகமானவை (.......)

23) கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பு

(1) முறையான பிரதேச நிர்வாக முறையொன்று நிலவியமை

(2) நாட்டின் நிலம் முழுவதும் அரசனுக்கே உரித்துடையது

(3) அதிகாரம் அரசசபையின் அமைச்சராகவும் நீதிபதிகளாகவும் விளங்கினர்

(4) நான்கு முக்கிய துறைகள் காணப்பட்டன

(5) பிரதேசங்கள் 21 ஆக பிரிக்கப்பட்டிருந்தன

24) கோட்டை நகரம்

(1) நிஸ்ஸங்க அழகக்கோனார் அமைத்தார்.

(2) இந்நகரம் ஸ்ரீஜயவர்த்தனபுர என அழைக்கப்பட்டது.

(3) 6ம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் தலைநகரமாக எழுச்சி பெற்றது.

(4) 1568 ம் ஆண்டு ஒல்லாந்தர் கோட்டையைக் கைப்பற்றினர்.

(5) 1551 ம் ஆண்டு தர்மபாலன் கோட்டையின் அரசனானான். (.......)

25) 19ம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியால் ஏற்பட்ட மாற்றம்

(1) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகமானது.

(2) ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தது.

(3) மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றது.

(4) தன்னிறைவுப் பொருளாதாரமான விவசாயம் வளர்ச்சி அடைந்தது.

(5) போக்குவரத்து பாதைகள் வளர்ச்சி அடைந்தன. (.......)

❖ **26 - 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A), (B), (C), (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ...................................................................... 1 எனவும்
(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ...................................................................... 2 எனவும்
(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ...................................................................... 3 எனவும்
(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ...................................................................... 4 எனவும்
ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் ... 5 எனவும்

அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

26) இலங்கையில் ஆரிய குடியேற்றங்கள் தொடர்பான கூற்றில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ஆரியர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்தனர்.
(B) ஆரியர்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.
(C) ஆரியர்கள் நதிக்கரையோரங்களில் குடியேற்றம் தாபித்தனர்.
(D) எல்லாக் குடியேற்றங்களும் உலர்வலயத்தில் அமைந்திருந்தன. (.......)

27) வட்டகாமினி அபய மன்னன் எதிர்நோக்கிய இடையூறுகள் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?
(A) கலிங்கமாகனின் படையெடுப்பு
(B) திஸ என்ற பிராமணனின் கிளர்ச்சி
(C) பெரும் பஞ்சம்
(D) சந்திரபானுவின் படையெடுப்பு (.......)

28) ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனது ஆட்சி பற்றிய கூற்றுக்களுள் சரியானது / சரியானவை
(A) நாயக்க மரபின் இறுதி மன்னன்
(B) முதலாவது ஆங்கிலப் படையெடுப்பு இடம்பெற்றது.
(C) இலங்கை முழுவதும் பிரித்தானிய ஆட்சிக்குட்படல்
(D) அமைதியான ஆட்சியாளானக விளங்கினான். (.......)

29) இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஒல்லாந்தர் ஆட்சியின் பெறுபேறுகள் தொடர்பான கூற்றுக்களுள் சரியானது / சரியானவை
(A) ஆங்கிலக் கல்வியின் பரவல்
(B) உரோமன் கத்தோலிக்கமதம் அறிமுகம்
(C) உரோமன் டச்சு சட்டம் அறிமுகம்
(D) புரட்டஸ்தாந்து மதம் அறிமுகம் (.......)

30) இலங்கையில் பௌத்தம் தாபிக்கப்பட்டமையுடன் தொடர்பான கூற்றுக்களுள் சரியானது / சரியானவை
(A) மகிந்தர் வருகை
(B) தேரர் சங்கமித்திரரின் வருகை
(C) மகாமேகவனம் பௌத்த சங்கத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது.
(D) கேமமாலா குமாரி தந்ததாதுவை எடுத்துவரல் (.......)

❖ **31 - 35 வரையுள்ள எல்லா வினாக்களிலும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

31) லம்பகர்ண வம்சத்தைச் சேர்ந்த முதலாவது அரசன்
(1) யட்டாலதீசன் (2) மகாநாகன் (3) வசபன்
(4) வங்கநாசிகதீசன் (5) தாதுசேனன் ( .......)

32) சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சிக்கு காரணமானவன்
(1) 7ம் புவனேகபாகு (2) 1ம் இராஜசிங்கன் (3) ரைகம பண்டார
(4) 2ம் இராஜசிங்கன் (5) தர்மபாலன் ( .......)

33) இரண்டாம் கஜபாகுவுக்கும் முதலாம் பராக்கிரமபாகுவுக்கும் இடையிலேற்பட்ட உடன்படிக்கையை குறிப்பிடும் சாசனம்
(1) தேவநகல கல்வெட்டு (2) ஆர்ப்பாக்கம் கல்வெட்டு
(3) அம்பகமுவ கல்வெட்டு (4) சங்கமு விகாரைக் கல்வெட்டு
(5) பனாகடுவ செப்பேடு ( .......)

34) சுனேத்திரா தேவி பிரிவெனாவை அமைத்த மன்னன்
(1) 4ம் பராக்கிரமபாகு (2) 2ம் பராக்கிரமபாகு (3) 6ம் பராக்கிரமபாகு
(4) 5ம் பராக்கிரமபாகு (5) 1ம் பராக்கிரமபாகு ( .......)

35) வெலிவிட்ட சரணங்கர தேரரின் உதவியுடன் பௌத்த மதத்தை புனருத்தாரணம் செய்த மன்னன்
(1) 2ம் இராஜசிங்கன் (2) 1ம் விமலதர்மசூரியன்
(3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (4) இராஜாதிராஜசிங்கன்
(5) ஸ்ரீவிஜய இராஜசிங்கன் ( .......)

❖ **36 - 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| முதலாம் கூற்று | | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்கவதுமாகும். |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 36) கம்பளைக் காலத்தில் கடலாதெனியா விகாரை அமைக்கப்பட்டது. | கணேஸ்வர ஆச்சாரியினால் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட பௌத்த விகாரை ஆகும். (..........) |
| 37) கொடாபயனின் மகன் கீர்த்தி ஸ்ரீ மேவன் ஆவார் | வட இந்தியாவில் புத்தகயாவில் நினைவு மண்டபம் ஒன்றை கீர்த்தி ஸ்ரீ மேவன் அமைத்தான். (..........) |
| 38) வெளிநாட்டு வர்த்தகத்தில் சிறப்பாக செயற் பட்டவன் 1ம் பராக்கிரமபாகு மன்னனாவான் | 'அந்தரங்கதுர' என்ற வர்த்தகக் குழுவை ஏற்படுத்தினான். (..........) |
| 39) மல்வானை ஒப்பந்தம் கோட்டை ஒல்லாந்தர் வசம் வந்ததின் அடிப்படையாகும். | நல்லூர் ஒப்பந்தம் யாழ்ப்பாணம் போர்த்துக் கேயர் வசப்பட்டதன் அடிப்படையாகும். (..........) |
| 40) மகாவிகாரைக்கு எதிராக இலங்கையில் தோன்றிய புதிய பிரிவுகளில் தர்ம ரிஷிப் பிரிவும் ஒன்றாகும். | மகாசேனன் காலத்தில் மகாயானம் பெருமளவு வளர்ச்சி அடைந்தது. (..........) |

**இலங்கை வரலாறு**

**(ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை)**

**பகுதி - II**

- **முதலாம் வினாவுக்கும் வேறு ஏதாவது மூன்று வினாக்களுக்கம் விடை எழுதுக.**
- **(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் ஒன்று வழங்கப்படும்)**

01) மேலே தரப்பட்ட இடங்கள் எல்லாவற்றையும் உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப் படத்திலே குறித்துப் பெயரிட்டு அவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

(i) தம்பபன்னி
(ii) வளவை கங்கை
(iii) கலாவாவி
(iv) கோகர்ண
(v) செங்கடகல
(vi) கதிர்காமம்
(vii) முல்லேரியா
(viii) யாப்பகுவா

(சரியாக குறித்தல் $8 \times 1 = 8$ புள்ளிகள்
சிறுகுறிப்பொன்றுக்கு $2 \times 5 = 10$ புள்ளிகள்
மொத்தம் 18 புள்ளிகள்)

02) "வட இந்தியாவிலிருந்து வருகை தந்த ஆரியர்களினால் இலங்கையில் குடியேற்றங்கள் தோற்றம் பெற்றன"

(அ) இலங்கையின் தென்கிழக்குத் திசையில் ஆரியக் குடியேற்றம் ஏற்பட்ட நதிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் உலர்வலயத்தில் முதலில் அமைத்த நான்கு குடியேற்றங்களையும் அதன் அமைச்சர்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(இ) ஆற்றங்கரைகளை அண்டி குடியேற்றங்கள் வளர்ச்சி அடைந்தமையை சுருக்கமாக விளக்குக. (7 புள்ளிகள்)

03) இலங்கை வரலாற்றில் தேவநம்பியதீசனது ஆட்சிக்காலம் கலாசார ரீதியாக முக்கியத்துவம் பெறுவதனை ஆராய்க. (14 புள்ளிகள்)

04) பொலனறுவை இராச்சியம் தளர்ச்சியடையவும் வீழ்ச்சியுறவும் வழிகோலிய காரணங்களைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

05) "பொலன்னறுவைக் காலத்திற்கு பிந்திய கால சிங்கள மன்னர்களில் தம்பதெனியாவின் 2ம் பராக்கிரமபாகு குறிப்பிடத்தக்கவன்"

(அ) 2ம் பராக்கிரமபாகுவிற்கு வழங்கப்பட்ட பட்டப் பெயர் யாது? (1 புள்ளி)

(ஆ) இம்மன்னன் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் இரண்டினைத் தருக. (2 புள்ளிகள்)

(இ) பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு இம்மன்னன் மேற்கொண்டிருந்த பணிகளைச் சுருக்கமாகத் தருக. (4 புள்ளிகள்)


(ஈ) 2ம் பராக்கிரமபாகுவின் அரசியற் சாதனைகளைப் பரிசீலனை செய்க. (7 புள்ளிகள்)

06) "6ம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகள் கொண்ட மாண்புமிக்க காலமாகும்". ஆராய்க. (14 புள்ளிகள்)

07) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மலைநாட்டு மன்னர்களுடன் கொண்டிருந்த தொடர்புகளை விளக்குக. (14 புள்ளிகள்)

08) இலங்கையின் கடற்கரையை அடுத்தமைந்த மாகாணங்களில் ஒல்லாந்தர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாக முறையின் முக்கிய அம்சங்களை விளக்குக. (14 புள்ளிகள்)

09) 1848 இன் புரட்சிக்கான காரணங்களையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் ஆராய்க. (14 புள்ளிகள்)


N
மாகாண எல்லை